செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

सत्यमेव जयते

**சுவடியியல் புலம்** நாள்: 02.08.2022

நடத்தும்

# செம்பதிப்பு உருவாக்கத்திற்கு யாப்பு, புணர்ச்சி இலக்கணப் பயன்பாடுகள்

**பயிலரங்கம் - 7**

**(24.08.2022 - 30.08.2022)**

## அறிவிப்பும் அழைப்பும்

உலகில் செம்மையான இலக்கண இலக்கியங்களையும் மொழிக்கட்டமைப்பையும் தன்னகத்தே கொண்ட மொழிகள் காலத்தால் அழியாமல் நிலைத்து நின்று தன் சீர்மை குன்றாமல் வாழும் தன்மை கொண்டனவாக விளங்குகின்றன. இவற்றுள் தனித்த மரபு சார்ந்த இலக்கணக் கட்டமைப்பையும் இலக்கியச் செழுமையையும் கொண்டு உலகின் உயர்தனிச் செம்மொழியாகத் தமிழ் மொழி சிறப்பிடம் பெற்று விளங்குகிறது.

தமிழ்ச் செவ்விலக்கியங்கள் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு புலவர்களால் தமிழ்ச் செய்யுள் இலக்கணக் கூறுகளான அசை, சீர், அடி, தளை போன்ற யாப்பிலக்கணக் கட்டமைப்போடு மரபிலக்கண முறையில் பா வடிவில் அமைக்கப்பட்டுள்ளன. சங்கப்புலவர் பெருமக்களால் பாங்குற இயற்றப்பட்ட செவ்விலக்கியங்கள் அனைத்தும் ஓலைச்சுவடிகளில் எழுத்தாக்கம் கொண்டன. இவ்வாறு சுவடிகளில் எழுதப்பட்ட செவ்விலக்கியங்களைப் பாதுகாக்கும்பொருட்டு மன்னர்கள், புரவலர்கள் பலரின் துணைகொண்டு புலவர்கள் அவர்தம் மாணவர்கள், எழுத்தர், கைவல்மகளிர் உள்ளிட்ட பலரின் தொடர்பங்களிப்பாக ஓலைச்சுவடிகளிலிருந்து காலந்தோறும் பெயர்த்துப் படியெடுக்கும் முறையில் எழுதப்பெற்றுப் பதிவேற்றம் செய்யப்பட்டன. இவ்வகையில் பல்வேறு எழுத்து நிலைகளில் ஓலைச்சுவடிகளிலிருந்து ஓலைச்சுவடி, தாட்சுவடி,

அச்சுத்தாள் என எழுத்தாணி கொண்டும் மைகொண்டும் இன்றைய அச்சாக்கம் வரை தொடர்ச்சியாகப் பதிப்பிக்கப்பட்டு வந்துள்ளன.

இவ்வாறான பதிப்புத் தொடர்ச்சியில் செவ்விலக்கியங்கள் தத்தமக்குரிய தொல்தமிழ் இலக்கணக் கட்டமைப்போடு திகழ்கின்றனவா? என்பதை ஆய்வுசெய்ய வேண்டிய பெரும்பொறுப்புத் தமிழ் அறிஞர்களிடம் உள்ளது. ஏனெனில் பல்வேறு காலச்சூழல்களில் பல்வேறு புலவர்களால் சுவடிப் பெயர்ப்பு நிலையில் செவ்விலக்கியங்களில் அசை, சீர், தொடை, தளை, புணர்ச்சி, அணி, கருத்துப்பொருண்மை போன்றவற்றில் ஏற்பட்ட மாற்றங்களால் பாட வேறுபாடுகள் உருவாயின.

தமிழ்ச் செவ்வியல் நூல்களுக்குச் செம்பதிப்பை உருவாக்கும் சீரிய முயற்சியில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் ஈடுபட்டு வருகிறது. "செம்பதிப்பு நூல் உருவாக்கத்தில் யாப்பிலக்கணம், புணர்ச்சி இலக்கணங்கள் பெரும்பங்காற்றுகின்றன" என்னும் கருத்தியலின் அடிப்படையில் "**செம்பதிப்பு உருவாக்கத்திற்கு யாப்பு, புணர்ச்சி இலக்கணப் பயன்பாடுகள்**" என்னும் பொருண்மையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் சுவடியியற்புலம் பயிலரங்கினை நடத்தவுள்ளது.

இப்பயிலரங்கமானது செவ்விலக்கியங்களில் பாடவேறுபாட்டினைக் களைந்து, சரியான பாடத்தை உறுதிசெய்வதற்கு யாப்பிலக்கணம், புணர்ச்சி இலக்கணம் ஆகியவற்றின் பயன்பாடுகள் குறித்த பயிற்சியாக அத்துறை சார்ந்த அறிஞர்களைக் கொண்டு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன வளாகத்தில் 24.08.2022 முதல் 30.08.2022 ஆம் நாள் வரையிலான ஏழுநாள் பயிலரங்கு நடைபெறவுள்ளது. இத்துறை சார்ந்த கல்லூரி, பல்கலைக்கழகப் **பேராசிரியர்கள்** இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயன்பெற அழைக்கப் பெறுகிறார்கள்.

## பயிலரங்கின் விதிமுறைகளும், விவரங்களும் பின்வருமாறு:

1. பயிலரங்கில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை: 25.
2. பயிலரங்கு நடைபெறும் நாட்கள்: **24.08.2022** முதல் **30.08.2022**முடிய ஏழு நாட்கள்

3. பயிலரங்கு நேரம்: காலை 10.00 – 01.00 & மாலை 02.00 – 05.00.

4. பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.

5. பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் நாட்படியும் மத்திய அரசு விதிமுறைகளின்படி வழங்கப்படும்.

6. பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும், தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.

7. பயிலரங்கில் கலந்து கொள்ள விரும்புவோர் இதன் கீழுள்ள விண்ணப்பத்தை நிறைவுசெய்து workshopc@cict.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். இப்பயிலரங்கைப் பற்றிய கூடுதல் தகவல்களைத் தெரிந்துகொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாகவே தொடர்புகொள்ள வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் தொலைபேசி/ அலைபேசி வழியாகத் தொடர்புகொள்ளக் கூடாது.

8. பயிலரங்கக் கட்டணம் ஏதும் இல்லை.

9. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல்/ புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.

10. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

11. நிறைவு செய்யப்பெற்ற விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதிநாள் 16.08.2022. காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டா.

12. இப்பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கபட்டவர்களுக்கு 17.08.2022 அன்று மின்னஞ்சல் / புலனம் மூலமாகத் தகவல் தெரிவிக்கப்படும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

---

## செம்பதிப்பு உருவாக்கத்திற்கு யாப்பு, புணர்ச்சி இலக்கணப் பயன்பாடுகள்

### பயிலரங்கம் - 7

### (24.08.2022 - 30.08.2022)

### விண்ணப்பப் படிவம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | பெயர் | தமிழ்<br>Tamil | | | | நிழற்படம் | |
| | | ஆங்கிலம்<br>English | | | | | |
| 2. | பதவி/ பணிநிலை<br>நிரந்தரம்/தற்காலிகம் | | | | | | |
| 3. | பிறந்த நாள் / வயது | | | | | | |
| 4. | பாலினம் | | | | | | |
| 5. | வகுப்பு | பொது\| General | | இ.பி.வ. \| OBC | | பட்டியல் இனம் \| SC. ST | |
| 6. | கல்வித் தகுதிகள் | | | | | | |
| 7. | பணியில் சேர்ந்த நாள் | | | | | | |
| 8. | நிறுவன முகவரி<br>(தொலைபேசி/மின்னஞ்சல் முகவரியுடன்) | | | | | | |
| 9. | இல்ல முகவரி<br>(தொலைபேசி/மின்னஞ்சல் முகவரியுடன்) | | | | | | |
| 10 | புலன எண் | | | | | | |

| | | |
|---|---|---|
| 11 | சிறப்பறிவு பெற்றுள்ள துறை | |
| 12 | முனைவர் பட்ட ஆய்வுத் தலைப்பு | |
| 13 | தாங்கள் பணியாற்றும் கல்வி நிறுவனம் பல்கலைக்கழக நிதி நல்கைக்குழுவின் 2(F) மற்றும் 12(B) அங்கீகாரம் பெற்றுள்ளதா? ஆம்/இல்லை ஆம் எனில் விவரம் தரப்படல் வேண்டும் | |
| 14 | செம்மொழி நிறுவனம் இக்கல்வி யாண்டில் நடத்திய பயிலரங்கில் கலந்து கொண்டீர்களா? | ஆம் \| Yes<br><br>இல்லை\| No |

நாள்: (கையொப்பம்)

இடம்:

உரிய முத்திரையுடன்

முதல்வர் / பதிவாளரின் கையொப்பம்